**தினகரன் (25.07.2023)**

புகளூர்

# டிஎன்பிஎல் சார்பில் இலவச மருத்துவ முகாம்



புகளூர் காகித ஆலையில் நடந்த இலவச மருத்துவ முகாமை காகித ஆலை செயல் இயக்குனர் கிருஷ்ணன் துவக்கி வைத்தார்.

வேலாயுதம்பாளையம், ஜூலை 25: கரூர் மாவட்டம் புகளூர் காகித ஆலை நிறுவனம் மற்றும் கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம் காகித ஆலை மெட்ரிக் மேல்நிலை பள்ளியில் நடைபெற்றது.

முகாமில் சிறப்பு விருந்தினராக காகித ஆலை நிறுவன செயல் இயக்குனர் (இயக்கம்) கிருஷ்ணன் கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றிவைத்து மருத்துவ முகாமை துவக்கிவைத்தார். மருத்துவ முகாமில் கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் மாதேஷ்வரன் தலைமையிலான 24 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் மருத்துவ குழுவினர் கலந்துகொண்டு முகாமில் சிகிச்சை அளித்தனர்.

முகாமில் கலந்துகொண்ட பொதுமக்களுக்கு சர்க்கரை நோய், ரத்தக்கொதிப்பு, மூளை, நரம்பியல், முதுகு தண்டுவடம், நுரையீரல், சிறுநீரகம், வயிறு, புற்றுநோய், கல்லீரல், எலும்பு, பல், கண், மகப்பேறு, மார்பகம் ,கர்ப்பப்பை, குழந்தைகள் நலம் ,நரம்பு, காது, மூக்கு, தொண்டை, கண் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து நோய் அறிகுறிகளுக்கும் பொது மருத்துவம் மற்றும் மருத்துவ பரிசோதனை செய்து மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

ரத்த பரிசோதனை செய்து ரத்தத்தில் சர்க்கரை அளவு, ரத்த அழுத்த அளவு பரிசோதனை, பிஎம்டி, பிஎப்டி மற்றும் இசிஜி பரிசோதனைகளும் செய்யப்பட்டது. கண் பரிசோதனை செய்யப்பட்டவர்களுக்கு உரிய மூக்கு கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டது. முகாமில் காகித ஆலையை சுற்றியுள்ள பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் இருந்து சுமார் 692 பேர் கலந்துகொண்டனர். இதில் பொது மக்களுக்கு மருந்து, மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டது.

முகாமுக்கான ஏற்பாடுகளை காகித ஆலை மனிதவள துறை பொது மேலாளர் கலைச்செல்வன் தலைமையில் மனிதவளத்துறை அதிகாரிகள் செய்திருந்தனர்.

**தினத்தந்தி (25.07.2023)**



# புகழூர் காகித ஆலை சார்பில் சிறப்பு மருத்துவ முகாம்

நொய்யல், ஜூலை.25-

புகழூர் காகித ஆலை மற்றும் கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை இணைந்து காகித ஆலை மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இலவச சிறப்பு மருத்துவ முகாமை நடத்தியது. முகாமை காகித ஆலை நிறுவன செயல் இயக்குனர் (இயக்கம்) கிருஷ்ணன் தொடங்கி வைத்தார். முகாமில் கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை தலைவரும், டாக்டருமான மாதேஷ்வரன் தலைமையில், 24 டாக்டர்கள் கொண்ட மருத்துவ குழுவினர் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு சர்க்கரை நோய், ரத்தக்கொதிப்பு, மூளை, நரம்பியல், முதுகு தண்டுவடம், நுரையீரல், சிறுநீரகம் உள்பட அனைத்து நோய் அறிகுறிகளுக்கும் பொதுமருத்துவம் மற்றும் மருத்துவ பரிசோதனை செய்து ஆலோசனை வழங்கினர்.

பின்னர் ரத்த பரிசோதனை செய்து ரத்தத்தில் சர்க்கரை அளவு, பி.எம்.டி, பி.எப்.டி., இ.சி.ஜி. பரிசோதனைகளும் செய்யப்பட்டது. கண் பரிசோதனை செய்யப்பட்டவர்களுக்கு உரிய மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டது. முகாமில் சுமார் 692 பேர் கலந்து கொண்டனர். இதில், பொதுமக்களுக்கு ரூ.1 லட்சத்து 20 ஆயிரத்தில் மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டது. முகாமில் (முதன்மை பொது மேலாளர் வனத்தோட்டம்-அபிவிருத்தி) சீனிவாசன், கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை டாக்டர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை காகித ஆலை மனிதவள துறை பொது மேலாளர் கலைச்செல்வன் தலைமையில் மனித வளத்துறை அலுவலர்கள் செய்திருந்தனர்.

**காலைக்கதிர் (25.07.2023)**

# டி.என்.பி.எல்., பள்ளியில் இலவச மருத்துவ முகாம்

**கரூர், ஜூலை 25–**

கரூர் மாவட்டம், புகழூர் டி.என்.பி.எல்., மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு செய்திதாள் காகித நிறுவனத்தின் சார்பில், இலவச மருத்துவ முகாம் நடந்தது.

செயல் இயக்குனர் (இயக்கம்) கிருஷ்ணன் துவக்கி வைத்தார். தனியார் மருத்துவமனை டாக்டர் மாதேஷ்வரன் தலைமையில் குழுவினர், பொதுமக்களுக்கு சர்க்கரை நோய், ரத்தக்கொதிப்பு, மூளை மற்றும் நரம்பியல், முதுகு தண்டுவடம், சிறுநீரகம், வயிறு, நுரையீரல், இருதயம், எலும்பு, தோல், குழந்தைகள் நலம், மகப்பேறு, கர்ப்பப்பை உள்பட பல்வேறு மருத்துவ பரிசோதனை செய்தனர். 692 பேர் சிகிச்சை பெற்றனர். இதில், 1.20 லட்சம் ரூபாய் மதிப்பிலான மருந்து மற்றும் மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டது

முதன்மை பொது மேலாளர் சீனிவாசன், பொதுமேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் உள்பட பலர் பங்கேற்றனர்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2021-2023 RNI.No.42628/85

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 25-7-2023 (செவ்வாய்க்கிழமை) 8 பக்கம் ₹ 5 ★
TRICHY 25-7-2023 (TUESDAY) 8 PAGES ₹ 5

மலர் 46 இதழ் 222
VOL: 46 ISSUE: 222

## ர்ளிகிழங்கு விலை உயர்வு
## ள் மகிழ்ச்சி

வாங்கிச் செல்கின்றனர். மரவள்ளி கிழங்குகளை வாங்கும் ஆலை உரிமையாளர்கள் மரவள்ளி கிழங்கில் உள்ள மாவுச்சத்து மற்றும் புள்ளிகள் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்கின்றனர்.

கடந்த வாரம் மரவள்ளி கிழங்கு டன் ஒன்று ரூ.12 ஆயிரத்திற்கு விற்பனை யானது. சேலம் மாவட்டம் கருமாந்துறை, திருச்சி மாவட்டம், துறையூர் அருகே உள்ள பச்சைமலை மற்றும் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை உள்ளிட்ட மலை பகுதிகளில் இருந்து மரவள்ளி கிழங்கு வரத்து குறைந்ததால் தற்பொழுது மரவள்ளி கிழங்கு டன் ஒன்றுக்கு ரூ.1000 வரை உயர்வடைந்து ரூ.13 ஆயிரத்திற்கு விற்பனையாகிறது. அதே போல் சிப்ஸ் தயாரிக்கும் மரவள்ளி கிழங்கு டன் ஒன்று கடந்த வாரம் டன் ஒன்று ரூ.13 ஆயிரத்திற்கு விற்பனை யானது. தற்போது டன் ஒன்றுக்கு ரூ.1000 வரை உயர்வடைந்து ரூ.14 ஆயிரத்திற்கு விற்பனை யாகி றது. மரவள்ளி கிழங்கு விலை உயர்வ டைந்து ள்ளதால் மரவள்ளி கிழங்கு பயிர் செய்துள்ள விவசா யிகள்




இலவச பொது மருத்துவ முகாமினை துவக்கி வைத்த நிகழ்வில் காகித நிறுவனத்தின் அதிகாரிகளை படத்தில் காணலாம்.

### கரூர் மாவட்டம்

# தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் இலவச பொது மருத்துவ முகாம்

கரூர், ஜூலை. 25—

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கோயம்பத்தூர் ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, உடன் இணைந்து ஆலையைச் சுற்றி அமைந்துள்ள பேரூராட்சி மற்றும் ஊராட்சி கிராம மக்களின் நலனுக்காக இலவச சிறப்பு பொது மருத்துவ முகாம் நடத்தியது. டிஎன்பிஐ மெட்ரிக் மேல்நிலை ப்பள்ளியில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமினை, நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் காகித நிறு வனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன்,

முதன்மை பொது மேலாளர் (வனத்தோ ட்டம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவி ருத்தி) மற்றும் நிலைத்தன்மை அதிகாரி சீனிவாசன், பொது மேலாளர் (மனி தவளம்) கலைச்செல்வன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர், கோயமுத்தூர். ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவ மனை தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மாதேஷ்வரன்,

தலைமையில் 24 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் மருத்துவக் குழுவி னர்கள் முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து மருத்துவ ஆலோசனைகள் வழங்கினார்கள். இச்சிறப்பு மருத்துவ முகாமினை காகித நிறுவனத்தின் மனித வளத்துறை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் தலைமையில் மனித வளத்துறை அலுவலர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## தினமலர் (26.07.2023)

# இலவச மருத்துவ முகாம்

**வேலா யுதம்பாளையம், ஜூலை 26–**

புகளூர் காகிதஆலை நிறுவனம் மற்றும் கோவை ராயல் கேர் மருத்துவமனை சார்பில் இலவச மருத்துவ முகாம் நடந்தது.

முகாமை காகிதஆலை நிறுவன செயல் இயக்குனர்(இயக்கம்) கிருஷ்ணன் தொடங்கி வைத்தார். கோவை ராயல் கேர் மருத்துவமனை தலைவர் டாக்டர் மாதேஷ்வரன் தலைமையிலான 24 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் மருத்துவக் குழுவினர் முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு பொது மருத்துவம், மருத்துவ பரிசோதனை செய்து ஆலோசனை வழங்கினர். கண் பரிசோதனை செய்யப்பட்டவர்களுக்கு இலவசமாக மூக்கு கண்ணாடி வழங்கப்பட்டது. காகித ஆலையைச் சுற்றியுள்ள பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் இருந்து 692 பேர் கலந்து கொண்டனர். ரூ.ஒரு லட்சத்து 20 ஆயிரம் மதிப்பிலான மருந்து, மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

இதற்கான ஏற்பாடுகளை காகிதஆலை மனிதவளத்துறை . பொது மேலாளர் கலைச்செல்வன் தலைமையில், மனித வளத்துறை அதிகாரிகள் செய்திருந்தனர்.